DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC. No. 43 /2025 |
| Deposition of witness | : | P W- 9 |
| Name | : | மணிகண்டன் |
| Father's /Husband Name | : | ராஜேந்திரன் |
| Village | : | திருவாரூர் |
| Taluk | : | திருவாரூர் |
| Age | : | 32 |
| Occupation | : | மருத்துவர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 08th day October, 2025.
Accused present.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது திருவாரூர் அரசு மருத்துவக்கல்லுரி மருத்துவமனையில் எலும்பு முறிவு சிகிச்சைப்பிரிவில் உதவி பேராசிரியராக பணியாற்றி வருகிறேன். கடந்த 08.01.2025-ம் தேதி காலை 10.57 மணியளவில் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லுரி மருத்துவமனையில் பணியில் இருந்த போது நன்னிலம் அரசு மருத்துவமனையிலிருந்து மேல்சிகிச்சைக்காக பரிந்துரைக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்ட கண்ணன் என்பவருக்கு விபத்து பதிவேட்டை பதிவு செய்து மேல் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார். அவரை நான் பரிசோதித்த போது அவரது வலது கை ஐந்தாவது விரலில் (சுண்டுவிரலில்) ஒரு எலும்பு முறிவும், மேலும், வலது கை மணிக்கட்டின் கீழ் சுண்டு விரலுக்கான எலும்பில் ஒரு எலும்பு முறிவும் ஏற்பட்டிருந்தது. அவருக்கு உரிய சிகிச்சையளித்து அவரை சிகிச்சையிலிருந்து விடுவித்தேன். அவபருக்கு ஏற்பட்ட காயமானது கொடுங்காயம் என்று சான்று வழங்கியுள்ளேன். மேற்படி நபருக்கு நான் வழங்கிய காயச்சான்று **அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

இவ்வழக்கு தொடர்பாக போலிசார் என்னை விசாரித்த தினம் ஞாபகம் உள்ளதா என்றால் இல்லை. போலிசார் என்னை விசாரித்த போது ஆயுதங்கள் ஏதேனும் காண்பித்து விசாரித்தார்களா என்றால் இல்லை. காயம்பட்ட நபருக்கு எக்ஸ்ரே எடுத்து பார்க்கப்பட்டது என்றால் சரிதான். அதனை போலிசார் விசாரணையில் அளித்தேனா

என்றால் இல்லை. நான் சொல்வது எக்ஸ்ரே எடுக்கவில்லை என்றாலும், அதன் காரணமாகத்தான் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

M S
BHARATHIDHASAN

Digitally signed by
M S
BHARATHIDHASAN
DN: cn=M S
BHARATHIDHASAN,
ou=TIRUVARUR,
o=TAMIL NADU
STATE JUDICIAL
SERVICE,
st=Tamilnadu, c=IN
Date: 2025.10.11
11:31:30 +0530